<u>சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்</u>

<u>MCOP. No.185/2022</u>

2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10–ஆம் நாள் ம.சா.1 சாட்சி திருமதி.காமாட்சி என் முன் சாட்சியாக விசாரிக்கப்படுபவர். 1969ம் ஆண்டு 24வது சட்டப்பிரிவு 4(1) ஏற்பாட்டின்படி உயர்திரு.கே.எஸ்.ஷபீனா, பி.ஏ., பி.எல்., சார்பு நீதிபதி, சத்தியமங்கலம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.காமாட்சி | தொழில் | : | |
| க/பெ | : | பாபு | கிராமம் | : | சூளேஸ்வரன்பட்டி |
| வயது | : | | தாலுக்கா | : | பொள்ளாச்சி |

<u>ம.சா.1 : முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் 1ம் மனுதாரர் ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

<u>ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.</u>

வடக்கிபாளையம் காவல் நிலைய குற்ற எண்.147/2022 வழக்கின் முதல் தகவல் அறிக்கை இணையதள நகல் ம.சா.ஆ.1 ஆகவும், வடக்கிபாளையம் காவல் நிலைய குற்ற எண்.147/2022 வழக்கின் குற்ற இறுதி அறிக்கை இணையதள நகல் ம.சா.ஆ.2 ஆகவும், வடக்கிபாளையம் காவல் நிலைய குற்ற எண்.147/2022 வழக்கின் மாதிரி

வரைபடம் இணையதள நகல் ம.சா.ஆ.3 ஆகவும், வடக்கிபாளையம் காவல் நிலைய குற்ற எண்.147/2022 வழக்கின் பார்வை மகஜர் இணையதள நகல் ம.சா.ஆ.4 ஆகவும், விபத்து பதிவேடு இணையதள நகல் ம.சா.ஆ.5 ஆகவும், TN 38 N 3477 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை இணையதள நகல் ம.சா.ஆ.6 ஆகவும், பாபுவின் சடலக்கூராய்வு அறிக்கை இணையதள நகல் ம.சா.ஆ.7 ஆகவும், பாபுவின் இறப்பு சான்றிதழ் இணையதள நகல் ம.சா.ஆ.8 ஆகவும், பாபுவின் வாரிசு சான்றிதழ் சான்று நகல் ம.சா.ஆ.9 ஆகவும், 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது ம.சா.ஆ.10 ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் மனுபடி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.